மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை மாவட்ட நலக் குழுவிலே தெரிவித்து வானொலிப் பெட்டிகளை வாங்கித் தரலாம்.

அரிசனங்களுக்கு கூட்டுறவுத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.

***69 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

வேலை வாய்ப்பில்லாத அரிசன மக்களுக்குக் கூட்டுறவுத் துறையி தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் தோல் தொழிலிலே நல்ல முன்னேற்றமடைந்து அந்நியச் செலாவணியை நிறைய பெற்றுக் கொடுக்கிறது. தோல் தொழிற்சாலைகள் சுகாதார முறையில் இல்லாததால் துர் நாற்றம் வருகிறது. ஆகவே, அரசாங்கம் சுகாதார வசதியுள்ள தொழிற் சாலைகளை அமைத்துக் கொடுத்து, முதலாளிகளுக்கும் தொழிலாளர் களுக்கும் நன்மை ஏற்படுகின்ற விதத்தில் கூட்டுறவு சொசைடிகள் மூலம் வசதிகளைச் செய்து தருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே 53 நகர கோவாபரேடிவ் சொசைடிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த சொசைடி மூலம் நன்மைகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். 1,859 பேர் இதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மேலும் இது போன்ற ஒரு கூட்டுறவுச் சங்கத்தைத் துவக்குகின்ற எண்ணம் இப்போது பரிசிலனையில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத் திலுள்ள திண்டுக்கல்லிலும் தோல் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இப்போது புதிதாக இயந்திரங்களைப் புகுத்திய தால் தொழிலாளர்கள் பலர் வேலை இழந்திருக்கிறார்கள். அந்த மாதிரி தொழிலாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அதுகுறித்து அரசாங்கத்திற்கு முழுத் தகவல் கொடுத்தால் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் தற்போது அதைப்பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை.